**அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்புஅபிப்பிராயம்

அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியத்தின்2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்று தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின்முக்கியத்துவம் காரணமாக நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றுக்காக அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் எனக்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நான் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நான் மறுப்பு அபிப்பிராயமொன்றை தெரிவிக்கின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களைஇலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,நிதியத்தின்தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தைகலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின்நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு,அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின்வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்குஇணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் பேரில் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளளனரின் அறிக்கையை வெளியிடுவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் அபிப்பராய மறுப்பிற்காக பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் எனக்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவததின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் பேரேடு கணக்கின்படி,நடைமுறை வேலைகளின்இறுதி பெறுமதிரூபா. 29,766,783 ஆக இருந்த போதும் மீளாய்வாண்டில் பேரேடு கணக்கின் ஆரம்ப இருப்பு ரூபா. 13,173,154 ஆக குறைத்துரூபா. 16,593,629 ஆக குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. பேரேடு கணக்கின்கணக்கின் பிரகாரம், நடைமுறை வேலைகளின்இறுதி பெறுமதிரூபா 17,015,762 ஆக இருந்த போதும் அது நிதிக் கூற்றுக்களில் ரூபா 15,953,517 எனக் ரூபா 1,062,245 குறைத்து குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட வேலை அளவை பூர்த்தி செய்யப்பட்ட வேலைக் கணக்கிற்கு மாற்றாமை காரணமாக இந்நிலைமை ஏற்பட்டிருந்தது. | சுரியான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் குறித்த சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் ரூபா 120,000 ஆன தொகை செலவிடப்பட்டு அவ்வாண்டில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்து நடை ஓடுபாதை மீளாய்வாண்டிலும் நிலையான சொத்துக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் நடைமுறை வேலைகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நடை ஒடு பாதை ஒழுக்கு மண் இட்டு தயார் செய்யப்பட்டுள்ளதுடன் அது எதிர்காலத்தில் முறையான வகையில் மேம்படுத்துவதற்கு உத்தேசித்திருப்பதால் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக | நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் கீழ் காண்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மின்சார சபையின் அறிக்கையின் பிரகாரம் மேலாய் ஆண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அட்டுறு மின்சார செலவினன் ரூபா 160,233 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுகளில் அது ரூபா 101,830 என ரூபா 58,403 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது | 2017 கணக்காய்வு அறுக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வகையில் ஆரம்ப மீதிகள் முன் கொண்டுவரப்பட்ட காரணத்தினால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக | சரியான பெறுமதி உள்ளடக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் உரிய சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய போதும் பணமாக கிடைத்திருந்த ரூபா 978,864 தொகையான நிலையான வைப்பு வட்டி காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ரூபா 2,162,317 என குறிப்பிடப்பட்டுள்ளது | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சீராக்கி சமர்ப்பிப்பதாக | காசு பாய்ச்சல் கூற்றில் உருப்படிகள் சரியாக வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட வேண்டும் |

**1.5.2 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நுழைவு சீட்டு வருமானத்தை உறுதிப்படுத்துவதற்கு முடியாமை) | ரூபா.111,891,649 | தேவையான மூல ஆவணங்கள் மற்றும் கணினி முறைமைக்கு அணுக முடியாமை | கணணி முறைமையை அணுகுவதற்கு சந்தர்ப்பத்தை கணக்காய்வு உத்தியோத்தர்களுக்கு வழங்குவதற்காக எமது நிறுவனத்தின் இரகசிய இலக்கத்தை பயன்படுத்தும்டு அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தொடர்புபடுத்தப்பட வேண்டும் என்பதாக | கணக்காய்வுக்கு தேவையான தகவல்களை தடையின்றி பெற்றுக் கொள்வதற்காக மூல ஆவணங்கள் மற்றும் முறைமையை அணுகுவதற்கு வழங்கப்பட வேண்டும் |
| (ஆ) | ஏனைய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ள வருமானத்தை உறுதிப்படுத்துவதற்கு முடியாமை | ரூபா.6,115,028 | பற்றுச்சீட்டு | ஏனைய வருமானம் தொடர்பாக பற்றுச் சீட்டுக்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக | வருமானத்தை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து பற்றுச் சீட்டுகளும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| (இ) | தெரிவு பரிசோதனையின் பிரகாரம் மீளாய் வாண்டில் தற்காலிக தொழிலாளர்களுக்காக மூன்று சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை | ரூபா.348,750 | சேவை தடவை அறிக்கை | விவசாய பண்ணையின் நடவடிக்கைகளுக்காக இப்பிரதேசத்தில் உள்ள தொழிலாளர்களை தற்காலிகமாக அழைத்து வரப்பட்டு வேலை நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டு சந்தர்ப்பத்துக்கு ஏற்ற நடவடிக்கை | ஊழியர்களை தற்காலிகமாக ஈடுபடுத்தும் போது அது தொடர்பாக உறுதிப்படுத்துவதற்காக சேவை தடவை அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வு பரிசோதனைக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | எடுக்கும் போது ரோஸ்டர் தயாரிக்கப்படாமை | வழங்கப்பட வேண்டும் |
| (ஈ) | பைனஸ் செய்கையில் விழுந்திருந்த மரங்களை கிழித்து 26 85 அடி நீளமான பலகை பெற்றுக் கொண்டமை | ரூபா.290,000’ | கிழிக்கப்பட்ட பலகைகளை பதிவேடுகளுக்கு உட்படுத்துதல் மற்றும் அவற்றின் பொருட்களின் நிதி பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை | விழுந்த பைனஸ் மரங்களிலிருந்து கிழிக்கப்பட்ட பலகைகள் நிறுவனத்தின் நிர்மாணனங்களுக் காக ஈடுபடுத்தப்பட்டதாக | முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு கிழிக்கப்பட்ட பலகைகளின் அளவு மற்றும் அவை அவற்றின் பயன்பாட்டின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவ தற்கு எதிர்காலத்தில் கிழிக்கும் மரங்களின் செலவினம் முறையாக பதிவேடுகளுக்கு உட்படுத்தவும் மதிப்பீடொன்றை யும் பெற்றுக்கொள்ள வேண்டும் |
| (உ) | மீளாய் வாண்டின் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள் பொரிகள் மற்றும் உபகரணங்கள் | ரூபா.61,292,185 | பெறுகை திட்டம் மதிப்பீடு அளவீட்டு பத்திரம் பட்டியல் கேள்வி ஆவணங்கள் இருப்பு பதிவேடு பொருள் மெய்மையாய்வு அறிக்கை | அந்தக் கொள்வனவு மேற் கொள்ளப் பட்டு உள்ளதுடன் அதற்காக கொடுப்பனவு செய்யப்பட்ட திகதிகளில் உரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் பட்டியல் இணைக்கப்பட்டு உள்ளதாக | முறையான பெறுகை நடைமுறை ஒன்றை பின்பற்றப்படாத உததியோகத்தர் கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கும் எதிர்காலத்தில் கொள்வனவு செய்யும் போது பெறுகை நியதிகளை பின்பற்றுவதற்கு ம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஊ) | தெரிவு கணக்காய்வு பரிசோதனை பிரகாரம் மீளாய் வாண்டில் | ரூபா.3,750,520 | பெறுகை ஆவணங்கள் உடன்படிக்கை அளவீட்டு பத்திரம் | எதிர்காலத்தில் குறைபாடுகளை சீராக்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பொருட்கள் மற்றும் சேவைகள் வளங்கள் மற்றும் நிர்மாணம் | | பெறுவனவு குறிப்பு பட்டியல் | | |
| (எ) | நிலையான வைப்புக்களும் கிடைத்த வட்டியும் | ரூபா.13,853,005 | நிலையான வைப்பு சான்றிதழ்கள் | நிலையான வைப்புக்கள் மற்றும் அதற்குரிய வட்டி பெறுமனவுக்காக உரிய பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படு வதாக | கணக்காய்வு சந்தர்ப்பத்தின் போது உரிய ஆவணங்களை நடவடிக்கை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | வங்கி மீதி உறுதிப்படுத்தல்கள் | ரூபா.1,646,454 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் | எதிர்காலத்தில் குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணக்கமின்மை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ உயிரின பல்வகை பொறுப்பு நிதியச் சட்டத்தின் 6 (2) (1) (ஊ) பிரிவு | பதவியணியினர் மற்றும் அவர்களை ஆட்சேர்ப்பது தொடர்பான விதிகளை அங்கீகரித்துக் கொண்டு முறையான ஒழுங்கமைப்பு கட்டமைப்பொன்றும் முறையான பதவியணி யொன்றை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நம்பிக்கை பொறுப்பு சபையின் இணக்கப்பாட்டின் பிரகாரம் தேவைபாட்டின் பேரில் பதவியணிக்கு ஆட்சேர்க்கப்பட்டதாக நிதிநிலைமை இன் பிரகாரம் மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியொன்றை ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்ததாக | ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அதிகாரத்தின் 125 ஆம் பிரிவு | அம்புழுவாவ வளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அலுவலகங்கள் சுற்றுலா விடுதி சிற்றுண்டிச் சாலை சமய நிறுவனங்கள் முதியோர் இல்லம் நுழைவு தோரணை மலசல கூடம் கோபுரங்கள் | கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்ட காலப்பகுதியில் நாசபை கட்டளை சட்டம் செயறற்படுத்தப்படாம ல் இருந்ததாக | நிர்மாணங்களுக்க ாக நகர சபை திட்டமிடல் குழு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும; |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் ஏனைய நிர்மாணங்களுக்காக கம்பளை நகர சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அதிகாரத்தின் 164ஆம் பிரிவு | அம்புழுவாக வளவில் வர்த்தக நடவடிக்கை வர்த்தக அடிப்படையில் நடாத்திச் செல்லப்படுகின்ற வியாபார நிலையங்களுக்காக வியாபார அனுமதி பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | நிறுவன அளவில் வர்த்தக அடிப்படையில் நடாத்துச் செல்லப்படுகின்ற நிறுவனங்களுக்காக வியாபார அனுமதி பத்திரங்கள் வாடகை அடிப்படையின் கீழ் நடத்திச் செல்லப்படும் வியாபாரங்கள் பெற்றுக் கொண்டுள்ளதாக | வர்த்தக அடிப்படையில் நடத்திச் செல்லப்படுகின்ற அனைத்து வியாபாரங்களுக்காக வியாபார அனுமதி பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப் பட்டு சட்டபூர்வமாக வியாபாரங்கள் செய்வதாக நிதியத்தினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் |
| (ஈ) | இலங்கை சனநாயக குடியரசின் நிதி பிரமாணம் 371(2) (அ) | அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து மொத்தம் ரூபா 17,939,342 தொகை சில்லறை காசு கட்டுநிதியாக இரண்டு ஊழியர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது அத்தோடு காசில் ஒரு தடவையில் ஒரு தேவைக்கு செலுத்தக்கூடிய அகக்கூடிய தொகை ரூபா 5,000 ஆக இருந்தபோதும் மீளாய்வாண்டில் 355 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 18,264,589 தொகை அதற்கு இணங்காத வகையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | நிறுவனத்தின் அவசர பராமரிப்பு வேலைகளுக்காகவே கொடுப்பனவுக்காக பணம் பெற்றுக் கொள்ளப்பட்டதாகவும் அந்த ஊழியர்கள் இரண்டு பேராலும் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்திற்கு உரிய பற்றுச்சீட்டுகள் முறையாக சமர்ப்பிக்கப்பட்டு அவை அங்கீகரித்துக் கொள்ளப்பட்டுள்ளதாக | நிதிப்பிரமாணங்களுக்கு முரணாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்காலத்தில் நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (உ) | இலங்கை சனநாயக குடியரசின் நிதி பிரமாணம் 381(1) | மீளாய்வாண்டில் நடைமுறை கணக்கென்று சம்பத் வங்கியில் ஆரம்பிக்கப் பட்டிருந்த போதும் அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறவுனத்திற்கு வருகை தரும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் ONLINEகொடுப்பனவிற்காக சம்பத் வங்கியில் கணக்கென்று ஆரம்பிக்கப்பட்டது பட்டதாகவும் நடைமுறை கணக்கினைபேணி | திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செல்லுகின்ற இலங்கை வங்கியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதும் தேவைப்பாடு நிறைவேற்றப்படாமையயால் அதற்காக இணங்கிய வங்கி மூலம் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | |
| (உ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2006 பெறுகை வழிகாட்டல் கோவை | மீளாய்வாண்டின் போது பெறுகை வழிகாட்டி கோவையின் நியதிகளில் பின்பற்றப்படாமல் 111 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 30,206,782 தொகை செலவிடப்பட்டு கொள்வனவுகள் மற்றும் மற்றும் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன | கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுடன் உரிய பட்டியல் இணைக்கப்பட்டு அதனுடன் மதிப்பீடுகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | பெறுகை வழிகாட்டி கோவையை பின்பற்றப்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான ஒழுக்காற்று பரிசோதனை ஒன்றைமேற்கொண்டு ஒழுங்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்காலத்தில் பெறுகை வழிகாட்டி கோவையிலன் ஏற்பாடு நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 44,632,225 ஆன தேறிய மிகையொன்றாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 11,955,562 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 32,676,663 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் இந்த அதிகரிப்பிற்கு டிக்கட் சீட்டு வருமானம் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவவினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவததின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் பெறவேண்டிய தொடர்பாடல் கோபுர வருமானம் ரூபா 542,350 தொகையை மீளாய்வாண்டிலும் அறவடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் முன் கொண்டுவரப்பட்ட தொலைத் தொடர்பு கோபுர வருமானத்திற்குரிய சீராக்கங்கள் செய்யப்பட்டு செலுத்த வேண்டிய தொடர்பான கோபுர வருமானமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த ஆனால் தொடர்ந்தும் நிதிக் கூற்றுகளில் குறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள முறையே ரூபா 3,646,278 தொகை ரூபா 2,932,310 மற்றும் ரூபா 3,717,829 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டு புத்தர் சிலை, வாகன நிறுத்தமிடம் மற்றும் Tree Top செயற்திட்டத்துக்காக சாத்தியவள அறிக்கை திட்டங்கள் மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்படாது இருந்ததுடன் மீளாய்வாண்டில் அச்செயற் திட்டங்களின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2020-2022 ஆம் ஆண்டுகள் முதல் முன் கொண்டுவரப்பட்ட முடிவடையாத வேலை பகுதிகளாக மேற்கொள்ளப்படுவதால் 2023 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதாக | செயற்திட்ட தாமதத்திற்கு தாக்கம் அளித்துள்ள காரணங்களை இனங் கண்டு அதற்காக பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிர்மாணங்கள் விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டுமற்றும் 2024 ஆண்டின் முதல் 03 மாதங்களில் இலங்கை வங்கி நடைமுறை கணக்கில் ரூபா 300,272 முதல் ரூபா 18,764,456 வரை அளவிலான பணம் சுழற்சியில் காணப்பட்ட போதும் நாளாந்த செலவினத்திற்கு போதுமான பணத்தை கையில் வைத்துக்கொண்டு மிகை பணத்தை குறுங்கால முதலீட்டு வழியில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2023 முதல் மூன்று மாதங்களில் நடைமுறை கணக்கில் காணப்பட்ட பணம் கேபிள் கார் செயற் திட்டத்திற்காக முதலீடு செய்யப்பட்டுள்ளதாக | . மிகை பணத்தை முறையான அங்கீகாரத்தின் கீழ் குறுங்காலத்தில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் அம்புழுவாவ தொகுதியில் போலிஸ் கடமை மேற்கொள்கின்ற அரச போலிஸ் உத்தியோத்தர்களுக்கு நலன்புரி செலவினமாக மொத்தம் ரூபா 205,275 மற்றும் புத்தாண்டு உபகார படிகளாக ரூபா 150,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | .நீண்டகாலமாக இந்நிதியத்தில் சேவை புரிந்து வருவதால் முகாமைத்துவ சபை அங்கீகாரத்துடன் கொடுப்பனவு செய்யப்பட்டதாக | அரச உத்தியோகத்தர்களுக்காக இவ்வாறான முறையற்ற படிகள் கொடுப்பனவு நிறுத்தப்பட வேண்டும் |
| (உ) | அம்புலுவாக தொகுதியில் சிறிய குளமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 744,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் மண் பரிசோதனைக்காக மண் வெட்டுவதற்காக 118.7இயந்திரம் மணித்தியாலத்திற்கு ரூபா 2,900 வீதம் ரூபா 344,000 தொகை கொடுப்பனவு செய்ய ப்பட்டிருந்தது ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்படுவதற்குரிய பெறுகை ஆவணங்கள் மண் பரிசோதனை அறிக்கை என்பன கணக்காய்விற்க்கு சுமப்பறிக்கப்படவில்லை | பயிர்ச் செய்கை இடத்திற்கு குட்டை ஒன்றை நிர்மாணிப்பதற்கு இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக் | பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும |
| (ஊ) | 2019 ஆம் ஆண்டின் ஒரு கல் சிலையொன்றை நிர்மாணிப்பதற்காக கருங்கல் உடைக்கப்பட்டிருந்த போதும் அக்கருங்கற்கள் எவ்வித நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படாத இருந்ததுடன் விற்பனை செய்யப்பட்டும் இருக்கவில்லை பொறுப்பு நிதியத்தின் தேவைக்காக 16 கியுப் கருங்கல் வழங்குவதற்காக மொத்தம் ரூபா 157,500 தொகை மீளாய் வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | கருங்கல் உடைக்கும் போது இந்த இடம் பள்ளத்துடன் கூடிய இடம் ஒன்றாக இருந்ததால் பள்ளத்திற்கு கற்கள் விழுந்தமையால் எஞ்சிய கற்கள் பெரிய அளவில் இருந்ததால் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முடியாதிருந்ததாக | வளவில் உடைத்து அகற்றப்பட்டிருந்த கருங் கற்களை வவவின் ஏனைய நிர்மாணங்களுக்காக பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல்மற்றும் / முறைப்படி விற்பனை செய்தல் / கை தவிர்க்கப்பட வேண்டும் |

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவததின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்புலுவாக உயிரியல் பல்வகைப்படுத்தல் தொகுதியில் கேபிள் கார் செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக நம்பிக்கை | கேபிள் கார் செயற் திட்டத்திற்காக பொது நம்பிக்கையாளரின் அங்கீகாரம் தற்போது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்காக செலவிடப்படுகின்ற | வளவினுள் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணங்கள் அல்லது ஏனைய முதலீடு செயற்பாடுகளின் போது அவை ஆரம்பிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| நிதியத்தின் பாதுகாப்பு பொறுப்பாளரான பொது நம்பிக்கையாளரின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை அவ்வாறே மீளாய்வாண்டில் இந்த செயற்திட்டத்திற்காக மொத்தம் ரூபா 4,395,500 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அது எந்த செயற்பாட்டுக்காக என உறுதிப்படுத்துவதற்கு கொடுப்பனவு உறுதிச் சீட்டுடன் பட்டோலைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை | அனைத்து பணமும் முதலீட்டுக்காக செய்யப் படும் செலவினம் ஒன்றென்பதாக | முன்னர் பாதுகாப்பு பொறுப்பாளரின் அங்கீகாரம் அல்லது அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவததின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 08 மாதங்கள் தாமதத்துடன் 2024 ஒக்தோபர் 21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன் செயலாற்றல் அறிக்கை அதனுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | 2023 ஆம் ஆண்டிற்குரிய வருமானங்கள் செலவினங்கள் தொடர்பான முறையே பதிவேடுகள் (கொடுப்பனவு உறுதிச்சிட்டு காசேடு, வங்கி கணக்கு, வருமானங்கள் செலவினங்கள்) என்பன உங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன2022 ஆம் ஆண்டு முதல் காணப்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் நிலைமை நிதி கூற்றுக்களை சமர்ப்பிப்பது தாமதம் கொரோனா தொற்று யார் என்பதால் அரசின் நிலைமை காரணமாக நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் தாமதமானதாக . | செயலாற்றல் அறிக்கை சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |